## கல்வியின் சிறப்பு

கல்வி என்பது இந்த உலகில் பெரிதாக மதிக்கப்படும் ஒன்று. “கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த ஆயுதம் என்பது நெல்சன் மண்டேலாவின் வாக்கு. ஒரு மரத்திற்கு எப்படி அதன் வேர் முக்கியமோ அதேபோலத்தான் மனிதனுக்குக் கல்வி. இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது ஓர் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவையாக மாறிவிட்டது. ஆனால், கல்வியை மட்டும் வைத்துக்கொண்டு மனிதன் வாழ்க்கையில் உயரிய நிலைகளுக்குச் செல்ல இயலாது. வாழ்க்கை மேம்படவும் நன்றாக இருக்கவும் கல்வி அவசியம்தான். எனினும், நல்ல பண்புகளும் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் இருந்தால்தான் வாழ்க்கை பூரணமாகும். ஆதலால், மனிதனின் வாழ்க்கை மேம்படுவதற்குக் கல்வி மட்டும் போதாது எனும் கருத்தை ஒட்டி இந்தக் கட்டுரை அமைகிறது.

கல்வி கற்பதால் நாம் நம் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்குச் செல்ல இயலும். நன்றாகப் படிப்பதன் மூலம் நம்மால் ஒரு நல்ல வேலைக்குச் செல்ல முடியும். நல்ல வேலைகள் என்று குறிப்பிடும்போது இரு கைகளை நிரப்பும் அளவு சம்பளத்தைக் கொடுக்கும் வேலைகளையே குறிக்கின்றன. சம்பளம் பெரிதாக இருப்பதால் நம்மால் வாகனம், வீடு, நகை போன்ற ஆடம்பரங்களை அனுபவிக்கலாம். நினைத்த பொருள்களை வாங்கலாம். எனவே, நல்ல கல்வியின் மூலம் ஆடம்பரத்தைப் பெற்றுக்கொள்ள இயலுவதோடு நல்ல வாழ்க்கை நிலையும் நமக்கு உண்டாகிறது.

ஆனால், வாழ்க்கையில் நாம் பொருளாதாரத்தில் மட்டும் மேம்பட்டால் போதுமா? பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதும் நமது வாழ்க்கையை மேம்படுத்தும். பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதென்பது நல்ல பண்புகளை உள்ளடக்கியிருந்தாலேயே முடியும். கல்வி மட்டும் போதும் என்றால் ஏன் பள்ளிகளில் மாணவர்களுக்கு இணைப்பாட நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. பண்புகளுக்கும் மனிதனுடைய வாழ்க்கையில் மதிப்புள்ளதே இதற்குக் காரணம் ஆகும். தவற்றிலிருந்து கற்றுக்கொள்வது, விடாமுயற்சி, தோல்வியிலிருந்து மீளும் தன்மை போன்ற நற்பண்புகளை உடைய மனிதன் கடவுளைவிட உயர்வாகக் காணப்படுகிறான்.

இத்தகைய நற்பண்புகள் ஒருவனுக்கு மிகவும் முக்கியம். “ஒழுக்கம் உயிரென ஓம்பப்படும்” என்பது முதுமொழி. அதிலிருந்தே மனித வாழ்க்கையில் பண்புகளுக்கான இடம்பற்றிய உண்மை புலப்படுகிறது. ஆகையால், பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதும் நம்மை அவர்களின் எடுத்துக்காட்டாகப் பார்ப்பதும் நாம் வாழ்ந்த வாழ்க்கை வெற்றியடைந்துவிட்டது என்பதற்கு ஒரு முக்கிய ஆதாரம் ஆகும். இது நம் வாழ்க்கையை மேம்படுத்தும். எனவே நற்பண்புகள் மூலம் நமது மதிப்பு உயர்வதும் நமது வாழ்க்கை மேம்படுவதும் உறுதி.

இன்றைய காலகட்டத்தில் மகிழ்ச்சி எனும் வார்த்தைக்குப் பொருள் மாறிவிட்டது. நமது வாழக்கையை மேம்படுத்துவதற்காக நாம் தொடர்ந்து வெற்றியைத் தேடி அலைகிறோம். ஆனால் நாம் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியைத் தொலைத்துவிட்டோம். இருப்பினும், வாழ்க்கையை மேம்படுத்துவதோடு வெற்றியையும் தேடித்தரக்கூடியது மகிழ்ச்சி ஒன்றுதான் என்பதை நம்மில் எத்தனை பேர் அறிவோம்? பணம் ஈட்டுவதற்காக அல்லும் பகலும் உழைத்து, குடும்பத்தை மறப்பது இன்றைய காலத்தில் இயல்பானதொன்றாகும். பொருள் ஈட்டுவதன் மூலம் மகிழ்ச்சி தரும் பொருட்களை வாங்கலாம். ஆனால், உண்மையான மகிழ்ச்சியை வாங்க இயலாது. வாழ்க்கையில்

மகிழ்ச்சியிருந்தால்தான் வாழ்க்கை நிலை மாறும். மகிழ்ச்சியைத் தொலைத்தவன் அவன் வாழ்க்கையையே தொலைத்தவனாகிறான். குடும்பத்தில் பிரச்சனைகள் இன்றி மகிழ்ச்சியாக இருப்பது வாழ்க்கையின் சூழ்நிலைகளை மாற்றியமைக்கும். இதனால், வாழ்க்கையின் தரம் உயரும். மேலும், வாழ்க்கை அழகாக மாறிவிடும். வாழ்க்கையை வாழ்வது என்பது அதிலிருந்து நமக்குக் கிட்டும் அனுபவத்தைப் பெறவே ஆகும். வாழ்க்கை எனும் சமையலில் மகிழ்ச்சி எனும் பொருள் இருந்தால்தான் சுவைகூடும். ஆகவே, மகிழ்ச்சியாக இருப்பதால் நல்ல அனுபவங்களைப் பெற இயலும். இதனால், வாழ்க்கையின் தரம் நிச்சயம் மேம்படும்.

நல்ல கல்வியின் மூலம் பொருள் கிட்டும். அதனால், நம்மால் ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் கைக்கொள்ள முடிகிறது. இது நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வாழ்க்கையை மேம்படுத்துவதாகத் தோன்றும். ஆனால், நற்பண்புகளுக்கும் மகிழ்ச்சிக்கும் வாழ்க்கையில் ஒரு முக்கிய இடம் உண்டு. இவையும் நம் வாழக்கைத்தரத்தை உயர்த்தி, வாழ்க்கையை மேம்படுத்தும். வாழ்க்கை என்பது மனிதர்களுக்குக் கிடைத்த வரம் ஆகவே, போற்றுவதும், மேம்படுத்துவதும் நம் கைகளில்தான் உள்ளது. ஆகையால், வாழ்க்கையை ஒரு பயணமாய் எண்ணி, அதை நம்மால் முடிந்தவரை ரசிப்பது அவசியம்.

**காவ்யபாரதி**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

## நம் எதிர்காலம் நம் கையில்

அறிவியல் வளர்ச்சியில் உலகில் அனைத்துச் செயல்பாடுகளும் அதிவேகமாகிக் கொண்டே போகின்றன. இன்று, தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் அனைவருடைய மனத்திலும் உண்டாகியுள்ளது. ஆனால், அதே சமயத்தில் உலகத்தில் எதிர்பாராதவாறு பல பாதிப்புகள் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு. எப்படி இருந்தாலும் இப்போதும் இளையர்கள் தம்மால் எதையும் சமாளிக்க முடியும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருக்கிறார்கள். அவர்கள் தம்மால் தம் வாழ்க்கையைச் சமாளித்து, சரிசெய்து தம் எதிர்காலத்தை நன்கு வடிவமைக்க முடியும் என்று நம்புகிறார்கள். இருப்பினும் பலருக்கு அதன்மீது சில குழப்பங்கள், சந்தேககங்கள் ஏற்படுவது உண்டு. இதைக் காட்டிலும் பல சாதனைகளை இளைஞர்கள் செய்துள்ளனர். அதனால், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது' என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள் என்ற வாக்கியம் ஓரளவிற்கு மட்டுமே உண்மை. இந்தக் கருத்துக்கு எதிராகப் பல சம்பவங்கள் நடக்கின்றன என்பதும் உண்மை. அதனால்தான் இவ்வாக்கியம் ஓரளவிற்கு மட்டுமே உண்மை.

முதலாவதாக, 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது' என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பதற்குக் காரணம் இளையர்கள் ஆவர். அவர்கள் நன்றாக உழைக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்வில் ஏற்படும் தடைகளைப் படிகளாக மாற்றி நன்றாக எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்று உழைக்கிறார்கள். அதை ஒரு சிலர் நன்கு செய்து இப்போது சிறந்து விளங்குகிறார்கள். அது மறுக்க முடியாத உண்மை. இந்த முன்னேற்றத்திற்கு அவர்களின் உழைப்பே காரணம் என எண்ணலாம். அதனால், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பது உண்மை.

ஆனால், என்னதான் நன்றாக உழைத்தாலும் பலர் தனக்கு ஏற்படும் சிறு தோல்விகளால் சுலபமாக வெறுத்துப்போய் இறுதியில் உழைப்பைக் கைவிடுகிறார்கள். இதனால், தாம் எட்டக்கூடிய உயரத்தை எட்டாமலேயே போகிறார்கள். உலகில் எத்தனையோ பேர் இருந்தும் சாதித்தவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். அதற்கு, அவர்களிடம் உள்ள தன்னம்பிக்கை குறைவாக இருப்பதும் உழைப்பைச் சீக்கிரம் கைவிட்டுச் சுலபமாக வெறுத்து போவதுமே காரணங்களாகும். எதிர்காலம் தம் கைகளில் என்று இளையர்களாக இருக்கும்போது நம்பியிருந்தால் இது நடந்திருக்காது. ஆகவே, 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்ற கருத்து உண்மையல்ல.

இருப்பினும், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பது உண்மை. அதற்குக் காரணம் இளையர்கள் நன்றாகப் படிக்கிறார்கள். அவர்கள் கல்வியின் அவசியம் அறிந்து நன்றாகப் படித்து எதிர்காலத்தில் நல்ல ஒரு நிலையில் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அதனால், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பது உண்மை.

அதே சமயத்தில் அவர்களுடைய செயல்களையும் நடக்கும் விதத்தையும் பார்க்கும் போதும் தம் எதிர்காலம் தம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புவதாகத் தெரியவில்லை. அவர்களிடம் உள்ள விளையாட்டுப் புத்தியும்

அலட்சியப்போக்கும் தம் எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் நன்கு யோசிப்பது இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் மனத்தில் இருந்தால் இவ்வாறு அலட்சியமாக நடந்துகொள்ளமாட்டார்கள். அதனால் நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள் என்று முழுமையாகச் சொல்லி விட முடியாது.

அதேசமயம், நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புவது போலத்தான் இருக்கிறது. இதற்குக் காரணம் இளையர்கள் மனத்தில் உலகத்தை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அவர்கள் தமக்குப் பிடித்ததுபோல உலகத்தையும் தம் எதிர்காலத்தையும் வடிவமைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நம் எதிர்காலம் நம் கைகளில் உள்ளது என்ற நம்பிக்கை இருப்பதால்தான் உலகையும் தம் எதிர்காலத்தையும் மாற்ற வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

ஆனால், உலகத்தை மாற்ற எண்ணுவதற்கான முயற்சி எல்லா இளைஞர்களிடம் இருப்பதாகத் தெரிவதில்லை. அவர்கள் காலம் போகிற போக்கில் எவ்வித ஒரு லட்சியமும் இல்லாமல் இருப்பதுபோல அவர்கள் இருக்கிறார்கள். முயற்சி செய்தால்தான் ஒன்று நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. எண்ணம் மட்டும் போதாது என்பதை அவர்கள் அறிந்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை. அதனால், நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையவர்கள் நம்புகிறார்கள்;' என்பது உண்மை அல்ல.

நம் எதிர்காலம் நம் கையில் என்ற நம்பிக்கையில் இளையர்கள் தனியாகவே எதையும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். தம்மை யாராவது ஒரு வட்டத்திற்குள் அடைக்க நினைத்தால் அவர்களுக்கு அது சுத்தமாகப் பிடிக்காது. மேலும், தாம் சுதந்திரமாக முடிவு எடுத்து வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இருப்பினும் சுயமாக முடிவெடுத்து வாழ விரும்புபவர்களில் சிலர் தம் பிரச்சினையைத் தாமாகவே சமாளிக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். இதனால், வாழ்வில் சில வேளைகளில் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறார்கள். தம் எதிர்காலம் தம் கைகளில் என்று நம்பினால் சுயமாக முடிவெடுக்கும் அவர்கள் அதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் தாமாகவே சமாளிக்க வேண்டும். ‘நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள் என்பது உண்மையாக இருந்தால் அவர்கள் தைரியமாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள். ஆனால், அது உண்மையல்ல அதனால்தான் அவர்கள் பிரச்சினைகளைக் கண்டு திக்கு முக்காடி அஞ்சுகிறார்கள். அவர்கள் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று எண்ணி இறுதியில் தவறான முடிவு எடுப்பதால் ஏற்படுவதே இப்பிரச்சினை. இளையர்கள் நம் எதிர்காலம் நம் கைகளில் என்று நம்பாததால் ஏற்படும் விளைவே இது. இறுதியில், ‘நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்’ என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. அது ஒவ்வொரு தனி மனிதரையும் பொருத்திருக்கிறது.

**அர்ஃபா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

# இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்

"இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்" என்று சொல்லிச் சொல்லிதான் நாம் இளையர்களை வளர்க்கிறோம். இந்த 21-ஆம் நூற்றாண்டில் ஒவ்வொரு மனிதனும் சுயமாக யோசித்துச் செயல்பட வேண்டிய நிலை உண்டாகியுள்ளது. தன்னை எவ்வாறெல்லாம் மேம்படுத்திக்கொள்ள முடியும், எதிர்காலத்தில் சமுதாயத்தில் ஒரு நல்ல மதிப்பிற்குரிய நிலையை அடைவது எப்படி எனப் பலவற்றையும் ஓடுகிற பாம்பைக் கையால் பிடிக்கும் இந்த வயதிலேயே, இளையர்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தப் போட்டித்தன்மை மிக்க உலகில் யாரும் அவர்களுக்கு உதவப்போவதில்லை என்ற அச்சம் அவர்களுக்குள் குடிகொண்டுவிட்டதே நம் எதிர்காலம் நம் கையில்தான் உள்ளது என்று இந்த வயதிலேயே இளையர்  எண்ணக் காரணம் என்று எண்ணுகிறேன்.

"ஒழுங்காகப்படி! அப்போதுதான் உனது எதிர்காலம் அமோகமாக இருக்கும் இப்போது விளையாடினால் எதிர்காலத்தில் உனது வாழ்க்கை நன்றாக அமையாது இவ்வாறு தொட்டதெற்கெல்லாம் "எதிர்காலம்! எதிர்காலம்! என்று பெற்றோர்கள் கூச்சலிடுவதால் எதைச் செய்தாலும் இதனால் எனது எதிர்காலத்திற்குப் பாதிப்பு ஏற்படுமா? என்றுதான் இளையர்கள் யோசிக்கிறார்கள். எதிர்காலத்தைப் பற்றி நாள்தோறும் சிந்தித்துக்கொண்டிருக்கும் இளையர்கள், பசுமையான இந்த இளைமைப் பருவத்தை ரசிக்கவும் அனுபவிக்கவும் தவறிவிடுகிறார்கள். எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை இருப்பது அவசியம்தான் ஆனால், அதற்கென்று 24 மணி நேரமும் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்தால் நிகழ்காலத்தில் நடக்கும் அற்புதமான விஷயங்களை இளையர்களால் மட்டுமின்றி யாராலும், நிம்மதியாக அனுபவிக்க இயலாது!.

"இந்த வருடம் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத் தேர்வு நடக்கவுள்ளது. அதற்குப் பின் நீ என்ன செய்யப்போகிறாய்? எதிர்காலத்தில் எந்த வேலைக்குச் செல்லலாம் என்று யோசிக்கிறாய்? என்று அவ்வப்போது பெற்றோர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் கேட்டவண்ணம் உள்ளனர். இதைக் கேட்டே இளையர்களுக்கு வாழ்க்கையே அலுத்துப்போய்விட்டது. தொடக்கப்பள்ளிக் கல்வி முடித்து உயர்நிலைப் பள்ளியில் சேரும் இளையர்களுக்கு அதிக மனவுளைச்சல் ஏற்படுகிறது. இன்னும் பத்து ஆண்டுகளில் பெரும்பாலானோர் அவர்கள் ஆசைப்படும் வேலைக்குச் சென்றுவிடுவார்கள். ஆதலால், அவர்கள் எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற சிக்கலுக்கு இப்போது ஆளாகிறார்கள். மேலும், அவர்களில் சிலர் தங்களது எதிர்காலத் திட்டங்களைப் பற்றிப் பெருமையாகக் கூறும்போது தானும் அவ்வாறு தனது எதிர்காலத்தைத் திட்டமிடவில்லையே என்ற வருத்தமும் கோபமும் ஒரு சிலருக்கு உண்டாகிறது. அப்போது இளையர்கள் கூடுதலான மனவுளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இந்த மனவுளைச்சலால், வருங்காலத்தைப் பற்றி அல்லும் பகலும் யோசித்து இளமைக் காலத்திலேயே நரைமுடி வளர்ந்துவிடுகிறது. பிறர் தனது எதிர்காலத்தை ஒரு சித்திரம்போல் தெளிவாகவும் அழகாகவும் தமது மனத்தில் வரைந்து வைத்திருப்பதால் இளையர்கள் தங்களது எதிர்காலம் தங்களது கைகளிலுள்ளது என்று கருதுகிறார்கள்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் மட்டுமின்றி இளையர்தம் தனிப்பட்ட ஆர்வமும் அவர்களைத் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் செவ்வனே சிந்திக்க வேண்டுமென்று தூண்டுகிறது. சிங்கப்பூர் உலக வரைபடத்தில் ஒரு சிறு புள்ளி. ஆனால், அதன் வளர்ச்சி அந்தப் புள்ளியைவிட நூறு மடங்கு பெரிதானது என்று சொன்னால் அது மிகையாகாது. உலகமயமாக்கலின் காரணமாக ஏற்பட்டுள்ள விரைவான வளர்ச்சியினாலும்

தொழில்நுட்பத்தின் அதிவேக முன்னேற்றத்தினாலும் சிங்கப்பூர் பிற நாடுகளுடன் போட்டிப்போட வேண்டுமென்றால் எதிர்காலத்தைப் பற்றி முன் கூட்டியே யோசிப்பது இன்றியமையாததாக மாறிவிட்டது. பிரதமர் லீ தனது தேசிய தினக் கூட்ட உரையின்போதும் சிங்கப்பூர் எதிர்காலத்தில் எவ்விதமான பிரச்சினைகளைச் சந்திக்க உள்ளது என்றும் அவற்றைச் சமாளிக்க அரசாங்கமும் மக்களும் எவ்வாறெல்லாம் தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும் என்பன பற்றிப் போதிய விளக்கங்களுடன் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார். சிங்கப்பூரின் பொருளாதாரம் அதன் மக்களின் கையிலுள்ளது. எனவே நம்பிக்கையோடு நமது இளையர்கள் எதிர்காலத்தில் வரும் பிரச்சினைகளை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து இப்போதே யோசிக்க வேண்டும். அரசாங்கமே எதிர்காலத்தைப் பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கையில் இளையர்கள் மட்டும் அதற்கு விதிவிலக்கா? இளையர்கள் மீது சிங்கப்பூர் அரசாங்கத்திற்கு இருக்கும் நம்பிக்கை பாராட்டக்கூடிய ஒன்றாக இருந்தாலும், அந்த நம்பிக்கையினால் இளையர்கள் எதிர்காலத்தைப் பற்றி எண்ணி அச்சப்படுகிறார்கள்.

என்னதான் இளையர்களின் கையில் அவர்களது எதிர்காலமிருந்தாலும் எதிர்காலத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் அவற்றைக் கடப்பதற்கான வழிமுறைகள் போன்ற அறிவுரைகளை வழங்குவதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், உற்றார் உறவினர்களோடு;, சமூகம், அரசாங்கம் போன்றவையும் தயாராகக் கத்துக்கொண்டிருக்கின்றன. இளையர்கள் கண்ணைக்கட்டிக் காட்டில்விட்டது போல் இருக்காமல் எதிர்காலத்தைத் தைரியமாகச் சந்திக்க சிங்கப்பூர் அரசாங்கமும் கல்வி அமைச்சும் பல திட்டங்களை வகுத்துள்ளன. உயர்நிலை நான்கில் படிக்கும்போது மாணவர்கள் தன் வாழ்வில் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பிரச்சினைகள் யாவை அவற்றை எதிர்க்க எவ்வாறு தம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணிபார்க்க வேண்டும். மாணவர்கள் எதிர்காலத்தில் அவர்களுக்குப் பிடித்த வேலையை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் இப்போது அடிக்கடி நடத்தப்படுகின்றன. உதாரணத்திற்கு எனது பள்ளியில் மார்ச் மாத விடுமுறையின்போது உயர்நிலைப் பள்ளியை விட்டு வெளியேறியதும், அடுத்தபடி என்ன செய்வது என்பதைப் பற்றிய பட்டறை எங்களுக்கு நடத்தப்பட்டது. எவ்வாறெல்லாம் நாம் பல்கலைக்கழகத்திற்குச் செல்லலாம், எந்தவிதமான பாடங்களைத் தேர்ந்தெடுப்பது போன்ற தகவல்களை அறிந்துகொள்ளும்படி பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. அந்தப் பட்டறைக்குப்பின் எதிர்காலத்தைபற்றிய பயம் நீங்கியதுபோல் ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது. அது மட்டுமின்றி ஆசிரியர்களும் பெற்றோர்களும் அடிக்கடி அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள்பற்றிப் பேசுவதோடு இளையர்கள் எடுக்கும் முடிவுகளுக்குத் தவறாமல் அறிவுரை வழங்குவதால் இளையர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கப் பயப்படத் தேவையில்லை. ஏனெனில், எந்த நேரத்திலும் அவர்களுக்குக் கைகொடுக்க எண்ணற்றவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணமே இளையர்களுக்கு மனத் தைரியத்தை அளிக்கிறது.

ஆக, என்னதான் பெற்றோர், ஆசிரியர்கள், உற்றார், உறவினர்கள், அரசாங்கம் என்று பலரும் இளையர்களைத் தங்களது எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறினாலும் இறுதியில் இளையர்களுக்கு உதவி அவர்களது எதிர்காலத்தை ஒளிமயமாக்க எத்தனைபேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தை மட்டும் இரவு பகல் பாராமல் யோசித்துக்கொண்டிருந்தால் வாழ்க்கையில் ஒரு நாள் இளமைப்பருவத்தைப் பற்றி நினைக்கும் போது எதிர்காலத்திற்காக இளமைப்பருவத்தில் செய்த செயல்கள்தான்

நினைவுக்கு வரும். நண்பர்களோடு செய்த அரட்டை, பெற்றோர்களுடன் செலவிட்ட இனிமையான நேரம், பள்ளியில் ஆசிரியரிடம் திட்டுவாங்கியது போன்ற பசுமையான எண்ணங்கள் யாவும் வாரா. இளையர்களின் எதிர்காலம் அவர்களது கையிலிருப்பது உண்மைதான். அதற்கென்று எதிர்காலத்தைப் பற்றி மட்டும் சிந்தித்தால் இளமைப்பருவம் கண் சிமிட்டும் வேகத்தில் பறந்து விடும். ஆகவே, இளையர்கள் எதிர்காலத்தை மட்டும் யோசிக்காமல் நிகழ்காலத்தை மன அமைதியோடு அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையின் பருவங்களை முழுமையாக ரசித்து மகிழ்ச்சியுடன் வாழ முடியும் அது மட்டுமின்றி வாழ்க்கையில் அனைத்தும் திட்டப்படி நடந்தால் வாழ்க்கையின் சுவாரசியம் போய்விடும். சில நேரங்கள் திட்டமிடாமல் இருப்பதே சிறந்தது என இளையவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**வைஷ்ணவி அழகுதேவன்**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

## இளையர் கடமை

அனைவருக்கும் என் முத்தான முத்தமிழ் வணக்கங்கள்! வாழ்க்கை என்பது ஒரு பூந்தோட்டம்! அதிலோ ஏற்படும் பல போராட்டம்! நம்நாடு சிங்காரச் சிங்கப்பூர் பல இளஞ்சிங்கங்கள் நிறைந்த நாட்டின் ஐம்பத்திரண்டாவது பிறந்தநாள் விரைவாக வந்துகொண்டிருக்கிறது. அதை ஆவலுடன் எதிர்பார்க்காத ஆளே இல்லை என்றால் அது மிகையாகது.

இம்மகிழ்ச்சியான தருணத்தில் நாம் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெறும் மீன்பிடிக் கிராமமாக இருந்த நாட்டைச் சிங்காரச் சிங்கையாக மாற்றியது லீ குவான் யூ என்னும் ஓர் இளைஞன்தான். ‘இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்’ என்னும் முதுமொழியை அறியாதவரே இருக்க முடியாது. அதற்குச் சிறந்த உதாரணம் நம் மறைந்த தலைவர் லீ குவான் யூ ஆவார். சிங்கப்பூரின் இதயத்துடிப்பே இளையர்கள்தான் என்பதை நிரூபித்தவர் ஆவார். அதை அவர் நம் உரைகளில் கூட பலமுறை கூறியுள்ளார். இச்சிறந்த மனிதன் வாழ்ந்த ஊரில் பிறந்த இளையர்களுக்கு நாட்டுப்பற்றைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

2003-ல், சார்ஸ் நோய் தாக்கியபோது நம் நாடு பல துன்பங்களுக்கு ஆளாகியது. ஆனால், அப்போது நம் இளையர்கள் பலர் கைகோர்த்து ஒற்றுமையாக நின்று அக்கொடிய நோயை விரட்டி, தங்களது நாட்டுப்பற்றை வெளிப்படுத்தினர். யாரும் நோய்க்குப் பயந்து நாட்டைவிட்டு வெளியேறவில்லை. அதிலேயே தெரிந்திருக்கும் நம் இளையர்களின் நாட்டுப்பற்று. என்னதான் நம் இளையர்கள் நாட்டின்மீது பற்றுக் கொண்டிருந்தாலும் அதை வெளிக்கொணர ஒற்றுமை மிக மிக முக்கியம். ஒற்றுமை! ஆம், வெவ்வேறு இனங்களுக்கிடையே உள்ள ஒற்றுமை. ஒரு கை தட்டினால் ஓசை வருமா? அதுபோல நம் இளையர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால்தான் நம்நாடு இன்னும் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் சமாளித்து வெற்றி நடை போடமுடியும்.

இன்றைய இளையர்கள் சிற்பங்கள் என்றால் பெற்றோர்கள் சிற்பிகள் சிறுவயதிலிருந்தே நாட்டைத் தன் உயிராக மதிக்க வேண்டும் என்று சொல்லிப் பெற்றோர்கள் வளர்க்க வேண்டும். ‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’ என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். அவ்வாறு சிறுவயதிலிருந்தே கற்பித்து வளர்ப்பதால் இளையவர்களுக்கு நாட்டுப்பற்று என்பது தானாகவே வந்துவிடும். நம் இளையர்கள் நாட்டுப்பற்றைப் பல வழிகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். உதாரணத்திற்குச் சிங்கப்பூரின் ‘தங்க மகன்’ என்று அழைக்கப்படும் ஜோசப் ஒலிம்பிக் நீச்சல் பந்தயத்தில் உலக சாதனை படைத்துச் சிங்கப்பூருக்குத் தங்கம் வென்று கொடுத்தார். அவர் நினைத்திருந்தால் வேறு நாட்டிற்குக் குடிபெயர்ந்து பதக்கத்தை வென்றிருக்கலாம். ஆனால், தான் பிறந்த நாட்டிற்குத் தங்கம் வென்று தர வேண்டும் என்று கடினமாக உழைத்தார். எனவே இதுவும் இளையர்கள் நாட்டுப்பற்றை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாகும்.

**ராஜ்குமார்**

**உயர்தமிழ்**

**உயர்நிலை**

## ஒற்றுமையே பலம்

மாற்றங்கள் நிறைந்த இவ்வுலகில் அனைவரும் வெற்றிக்கனியினைச் சுவைக்க விரும்புகின்றனர். வெற்றி என்பதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கத்தினைக் கொண்டுள்ளனர். மாணவர்கள் என்னும்போது தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து நல்ல பள்ளிகளுக்குச் செல்வது, அதன்மூலம் வருங்காலத்தில் தங்களுக்கென நல்ல இடத்தைத் தக்க வைத்துக்கொள்ளுதல் போன்றவை வெற்றி எனப்படும். வேலை செய்பவர்களுக்கு வெற்றி என்பது சொந்தத்துறையில் தாம் உயர்ந்த பதவியை எட்டுவதாகும். எனவே வாழ்வில் வெற்றி அடைய வேண்டும் என எண்ணிக் குழு உணர்வுடன் செயல்படுவது அவசியம். வெற்றி அடைய வேண்டும் என எண்ணி அனைவரும் குழு உணர்வுடன் செயல்படுவதால் எப்படி வெற்றி கிடைக்கும் என நீங்கள் எண்ணக்கூடும். அதனை இக்கட்டுரையில் விளக்கவுள்ளேன்.

குழு உணர்வோடு வாழ்வினை அணுகுவதன் மூலம் நம்மால் ஒரு பிரச்சினையைப் பல கோணங்களிலிருந்து ஆராய முடிகிறது. நம்மால் பல அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு பிறருடைய அனுபவங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள முடிகிறது. ஒரு குழுவோடு சேர்ந்து மேன்மை அடையப் பாடுபடும்போது வெற்றி எப்படிக் கிடைக்காது. ஆனால், பிறருடைய கருத்துக்களைக் கருத்திற்கொண்டு நமது முடிவினையும் வெளிப்படுத்துவது எப்படி எனக் கற்றுக்கொள்ள முடிகிறது. இதன்மூலம், சில சமயங்களில் நமது உரிமையை விட்டுக்கொடுக்க நேர்ந்தாலும் நாளடைவில் எவ்வாறு சரியான முடிவினை எடுப்பது எனக் கற்றுக்கொள்ள முடிகிறது.

அனைவரும் தனிமரம் தோப்பாகாது என்பதனை நினைவிற்கொள்வது அவசியம். ஒருவரால் பிறருடைய உதவி இன்றி வாழ்வில் வெற்றி அடைய முடியாது. சரி எது, தவறு எது எனச்சொல்லிக் கொடுக்க ஒருவர், தோல்விகளின்போது துவண்டு கிடக்கும் நிலையில் உற்சாகப்படுத்த ஒருவர், பின் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள ஒருவர், பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள ஒருவர் என நம் வாழ்வில் பலரின் உதவி தேவைப்படுகிறது. அனைவரையும் பகைத்துக் கொள்வதன் மூலம் நம்மால் வாழ்வில் வெற்றி அடைய முடியாமல் போவதை நினைத்து அதைத் தவிர்த்து நாமும் உயர்வோம், நானிலத்தையும் உயர்த்துவோம் என்ற சான்றோரின் கூற்றுக்கு இணங்க பிறருடன் கூடிக் கருத்துப் பரிமாற்றம் செய்தால் மட்டுமே நாம், நிறைய சாதனைகளைச் செய்து வாழ்வில் வெற்றி அடைய முடியும்.

போட்டித்தன்மை ஒருவருடைய போராட்டத்தை எதிர்க்கொள்ளும் மனவலிமையை ஏற்படுத்துகிறது. ஊக்குவிக்க ஆளிருந்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான் என நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். பிறர் நமக்கு ஊக்கம் அளிக்கும்போது நம்மிடையே உருவாகும் போட்டித்தன்மை அனைவரைக் காட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உந்துதலைக் கூட்டும். அப்போது நாம் இதுவரை செய்திடாத அளவிற்குக் கடின உழைப்பினை ஆற்ற நம்மையே தயார்படுத்துவோம். அதன் விளைவாக நாம் இதுவரை கண்டிராத அளவு வெற்றியைக் காண்போம்.

போட்டித்தன்மையே உயர்வு காண்பதை நோக்கி நம்மைச் செயற்படுத்துகிறது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோர் மாணவர்களுக்கிடையே போட்டித்தன்மையை விதைப்பதை விட நாம் தோல்வி காணும் போதே, நம்மிடையே உண்மையான போட்டித்தன்மை உருவாகிறது. போட்டித்தன்மையை நாம் கொண்டிருக்கையில் நமது

கவனம் முழுவதும் நாம் அடையத் துடிக்கும் குறிக்கோள் மீது மட்டுமே இருக்கும். அதில் வெற்றி அடையும் வரை நம்மால் நிம்மதியாக இருக்க இயலாது. எனவே, அதில் கண்டிப்பாக வெற்றி அடைவது நிச்சயம். இருப்பினும் 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதற்கேற்ப அளவான போட்டித்தன்மையுடனும் விட்டுக்கொடுத்துப் போவதன் மூலமும் புரிந்துணர்வுவோடு நடந்து குழு உணர்வோடு வாழ்வதே சிறந்தது.

**பிரித்திகா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

## என்னால் முடியும்

வாழ்க்கையில் தோல்விகள் ஏற்படுவது இயல்பு. ஒவ்வொரு நாளும் நாம் வெற்றி தோல்விகளை அனுபவிக்கின்றோம். நம்மைச் சுற்றி ஒரே நாளில் பற்பல சம்பவங்கள் நிகழ்கின்றன. அவற்றைக் கவனித்தாலே நாம் பல அற்புதமானவற்றைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால், நாம் எப்படி இருக்கின்றோம்? நான் உண்டு என் வேலை உண்டு என்றல்லவோ வாழ்கின்றோம். அப்படிப்பட்ட வாழ்க்கையை மறந்து புதியனவற்றைக் கற்றுக்கொள்ளவும் புதிய அனுபவம் பெறுவதிலும் ஆர்வம் காட்ட வேண்டும். நான் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் பொறுப்பில்லாமல், என்னால் எதுவும் முடியாது என்று இருந்த என்னை அன்று நடந்த சம்பவம் இவ்வாறு மாற்றியதே ஆகும். அதன்பிறகு நான் அப்படியே புதியவளாக மாறிவிட்டேன்.

எப்போதும்போல நான் கணிதத் தேர்வுக்கு எந்தவிதத் தயாரிப்பும் இன்றி ஒரு சிறிய பயிற்சி கூடச் செய்யாமல் எனக்கென்ன என்று தேர்வுக்குச் சென்றேன். நான் தேர்வு ஆரம்பித்து 10 நிமிடம் சென்றுபிறகுதான் தேர்வையே தொடங்கினேன். படிக்காமல் சென்றது, தேர்வைத் தாமதமாகத் தொடங்கியது என்பன யாவும் என் தவறு. தேர்வு முடிந்தபின் தோழிகளிடம் நான் நேரப் பற்றாக்குறை மற்றும் தேர்வு கடினம் என்று கூறினேன். நான் இதுவரை தோல்வி அடைந்ததில்லை. ஆனால் இந்தமுறை மட்டும் நான் மிக மோசமான மதிப்பெண்கள் பெற்றிருந்தேன். நான் அப்போது அதிர்ச்சியில் வாயைப் பிளந்து சிலையாய் நின்றேன். அந்த நொடியில் கூடத் தேர்வைச் சிறப்பாகச் செய்யாததற்கு வருத்தப்படவில்லை. ஆனால் என் பெற்றோர் என்னை என்ன செய்வார்களோ என்று எண்ணியே அஞ்சினேன்.

நான் எப்போதும் போல வீட்டிற்கு மிகச் சாதாரணமாகச் சென்றேன். என் கணிதத் தேர்வுத்தாள் என்னிடம் இருப்பதைக் காட்டிக்கொள்ளாமல் என் அறைக்குச் சென்று அப்படியே சற்று நேரத்தில் உறங்கிவிட்டேன். என் தங்கை என்னை விளையாட அழைக்க வந்திருந்தாள். அப்போது நான் அதைச் சிறிதும் உணரவில்லை. என் தங்கை என் பள்ளிப்பையில் எதையோ நோண்டி என் கணிதத் தேர்வுத் தாளை எடுத்துக்கொண்டு சென்று கூடத்தில் அமர்ந்து ஏதோ செய்து கொண்டிருந்தாள். அப்போது நான் விழித்தேன். பக்கத்தில் என் பள்ளிப்பை கலைந்து இருப்பதை கண்டவுடன் பயத்துடனும் பதற்றத்துடனும் என் கணிதத் தேர்வுத்தாளை விரைவாகத் தேடினேன். அதைக் காணவில்லை. நான் பயத்தில் வெளியே சென்றேன். கூடத்தில் என் தங்கை என் தேர்வுத்தாள் போல எதையோ வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். அருகே சென்று பார்த்தபோது அது என் தேர்வுத்தாள்தான். அவளை நான் அடித்துவிட்டு என் தேர்வுத்தாளைப் பிடுங்கினேன். என் தாயார் என் தங்கை அழுவதைக் கேட்டு உடனே கூடத்திற்கு வந்தார். என் தேர்வுத்தாளைக்கண்டார்.

நடந்தது என்னவாக இருக்கும் என்று யூகித்து அவர் என் தாளில் உள்ள மதிப்பெண்களைப் பார்க்க வேண்டும் என்று கூறினார். என் கையிலிருந்து என் தாளைப் பிடுங்கி உள்ளே பார்த்தார். நான் பயத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தேன். திட்டுவாரே என்று எண்ணியபோது அவர் என்னை திட்டாமல் ஏன் இப்படிக் குறைவான மதிப்பெண்கள் எடுத்தாய் எனக் கேட்டபோது நான், “எனக்குக் கணிதம்தான் பிடிக்காதே, எனக்கு அது சுட்டுப்போட்டாலும் வராது” எனக் கூறினேன். நீ துணைப்பாட வகுப்புக்கு செல்கிறாயா? என்று கேட்டபோது, நான் வேண்டாம், எனக்குக் கணக்குப் பாடம் பிடிக்காது என்றேன். இப்படியே இருந்தால் நீ எப்படிக் கணக்கில் சிறப்பாகச் செய்வாய்.

நீ ஏதேனும் முயற்சி செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறினார் என் அம்மா என் பிடிவாதத்தைக் கண்டு என்னைத் திட்டவும் செய்தார். இருப்பினும், அது எந்த விதத்திலும் என்னைப் பாதிக்கவில்லை.

நான் அறைக்குச் சென்று சற்று யோசித்தேன். அப்போது என் தங்கை என் அறையில் உள்ள மின்விசிறியின் பொத்தானை அழுத்துவதற்காகக் குதித்தாள். நான் அவளால் முடியாது என்றும் அறையிலிருந்து வெளியே செல்லுமாறும் சொன்னேன். அவள் மீண்டும் மீண்டும் முயற்சி செய்து இறுதியில் மின்விசிறியின் பொத்தானை அழுத்தினாள். அப்போது நான் ஒன்றைமட்டும் உணர்ந்தேன். நான் சுத்தமாக முயற்சி செய்யாமல் இப்படிப் பொறுப்பில்லாமல் இருந்தால் என்னால் எதையும் சாதிக்க முடியாது எதையும் முயற்சி செய்து பார்க்க வேண்டும் விடாமுயற்சியுடன் செயல்பட்டால் இறுதியில் நாம் நிச்சயம் அதை அடைவோம் என்பதை என் தங்கை மூலம் புரிந்துகொண்டேன். அவளுக்கு இருந்த விடாமுயற்சி என்பது அவளுடைய அக்காவாகிய எனக்கு இல்லாததை எண்ணி வெட்கினேன். என் தாயார் கூறியபடி அவரைப் பெருமைப்படச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தேன். அன்று அந்தச் சம்பவம் என்னால் முடியாது எதுவும் இல்லை என்று என்னை உணர வைத்தது. அந்தச் சம்பவத்திலிருந்து இப்போதுவரை நான் ஒரு புதியவளாக இருக்கிறேன். இந்தச் சம்பவம் என் வாழ்க்கையை மாற்றிய மறக்க முடியாத சம்பவம் ஆகும்.

**அர்பா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

## தமிழை நேசிப்போம்

சிங்கப்பூர் பல இனம் மக்கள் கலந்து வாழும் ஒரு நாடாக உள்ளது. அதனால் ஒவ்வொரு இனத்தாரும் தமக்கென ஒரு தாய்மொழியைக் கொண்டுள்ளனர். பள்ளிக்கூடங்களில் மலாய், தமிழ் மற்றும் சீனம் ஆகிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. இன்றைய மாணவர்கள் தாய்மொழி வகுப்புகளின் போது மட்டும்தான் தம் தாய்மொழியில் உரையாடுகின்றனர். மற்ற வகுப்புகளிலெல்லாம், ஆங்கிலத்தையே பயன்படுத்திப் பேசுவதால், ஆங்கிலத்தில் உரையாடுவது அவர்களுக்கு இன்னும் சுலபமாக உள்ளது. இதனால்தான் சிங்கப்பூரிலுள்ள மாணவர்கள் தாய்மொழி கற்றலில் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்.

நான் முன்பு கூறியது போலவே, மாணவர்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது சுலபம் என எண்ணுகிறார்கள். ஆகவே, பலர் இன்று தன் தாய்மொழிகளில் வெளிவரும் பாடலையும் படத்தையும் விரும்பாமல் ஆங்கிலப் பாடல்களை விரும்புகின்றனர். இது போன்று வேறு மொழிப்படத்தையும் பாட்டையுமே முறையே விரும்பிப் பார்த்தும் கேட்டும் வளரும்போது ஆங்கிலம்தான் வளர்ச்சி அடையும் தவிர தாய்மொழி வளராது. இதுவும் மாணவர்கள் தாய்மொழி கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

மாணவர்கள் ஆங்கிலத்தைக் கற்பது சுலபம் என்று எண்ணுவதால் வீட்டில் கூடத் தம் பெற்றோரிடம் தாய்மொழியில் உரையாட விரும்புவதில்லை. இவ்வாறு இவர்கள் தம் தாய்மொழியில் பேசாமல் இருந்தால் பள்ளியில் நிகழும் வாய்மொழித்தேர்வில் தேர்ச்சி பெற முடியாது. ஆகவே, இது அவர்களுடைய மதிப்பெண்களையும் படிப்பில் உள்ள தேர்ச்சியையும் பாதிக்கும்.

இன்றைய மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் அல்லது வீட்டிற்குச் செல்லும் வழியில் அல்லது வீட்டில் தம் தாய்மொழியில் உள்ள கதைப் புத்தகங்களைப் படிக்காமல் ஆங்கிலப் புத்தகங்களைப் படிக்கிறார்கள். நூலகங்களில் தம் தாய்மொழியில் வெளியான நூல்கள் உள்ள பகுதிக்குச் செல்லாமல் ஆங்கிலப் பகுதிக்குச் செல்கிறார்கள். இதுவும் அவர்களுடைய வளர்ச்சிக்கு ஒரு தடையாக இருக்கும். இப்பிரச்சினைகளைப் பிரச்சினைகளாகவே விட்டுவிடாமல் அதற்குத் தீர்வு கண்டுபிடிக்க வேண்டும் என்பதால் நான் இப்போது அத்தீர்வுகளைப் பற்றிக் கூறுகின்றேன்.

மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தைப் பார்ப்பதையும் பாட்டைக் கேட்பதையும் குறைத்துவிட்டு அதிகமான அளவில் தாய்மொழியிலுள்ள படங்களையும் பாட்டையும் பார்க்க வேண்டும் மற்றும் கேட்க வேண்டும். இப்படங்களின் மூலம் நமக்குத் தெரியாத சொல்லுக்குப் பொருள் புரியலாம். மேலும் நம் பேச்சுத் திறனையும் வளர்த்துக் கொள்ளலாம். படங்கள் மட்டுமின்றி நாம் நம் நாட்டுத் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பப்படும் தாய்மொழியிலுள்ள நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். மாணவர்களுக்குத் தேவையான நிறைய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் நாம் தினந்தோறும் தொலைக்காட்சியில் செய்தியையும் பார்க்கலாம். இவ்வாறே மாணவர்களாகிய நாம் நம் தாய்மொழியை வளர்க்கலாம். இரண்டாவதாக , பெற்றோர் வீட்டில் தாய்மொழியை மட்டும் பேச வேண்டும் என்று தமக்குதாமே கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டால் வீட்டில் மாணவர்களாகிய பிள்ளைகள் தாய்மொழியில் பேசி, உரையாடி அதை வளர்த்துக்கொள்ளுவார்கள். இதையே ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தால் பள்ளிக்கூடங்களில் நிகழும் வாய்மொழித் தேர்வுகளில் அஞ்சாமல் தைரியமாகப் பேசுவார்கள்.

இறுதியாக, மாணவர்கள் ஆங்கிலப் புத்தகங்களைப் படிப்பதை அளவோடு வைத்துக்கொண்டு தாய்மொழியிலுள்ள புத்தகங்களைப் படித்தால் நம் மொழியும் சொல் வளமும் மேம்படும். நாம் நூலகத்திற்குச் சென்று தாய்மொழியில் உள்ள புத்தகங்களை இரவல் வாங்கிப் படிக்கலாம். இவ்வாறு செய்தால் நாம் பள்ளிக்கூடங்களில் எழுதும் கட்டுரைகள் சிறப்பாக அமையும்.

ஆகவே, மாணவர்களாகிய நாம் ஆங்கிலத்தில் மட்டுமல்ல நம் தாய்மொழியிலும் கூட நன்றாக வளர்ச்சி பெறவேண்டும். ஆங்கிலம் நமக்கு எவ்வளவு முக்கியமோ அதே போல்தான் நம் தாய்மொழியும் நமக்கு முக்கியம் ஆங்கிலத்திற்குக் கொடுக்கும் அதே அளவு முக்கியத்துவத்தைத் தாய்மொழிக்கும் கொடுத்தால் நம் தாய்மொழியும் கற்பதற்குச் சுலபமாக இருக்கும். நம்மால் முடிந்ததைச் செய்து நம் தாய்மொழியை மேம்படுத்த வேண்டும்.

**தஸ்னீம்**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

## வாய்ப்பைத் தவற விடாதே

“மாணவர்களே, உங்கள் அனைவருக்கும் நம் நாட்டுப் பிரதமர் முன் ஒரு நாடகம் நடிக்கும் அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது” என்று உற்சாகத்துடன் என் ஆசிரியர் கூறினார். இதைக் கேட்ட நான் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தேன். நான் காண்பதெல்லாம் கனவல்ல, நனவுதான் என்பதை நம்புவதற்குச் சிரமப்பட்டேன். அப்பொழுதுதான், சந்தோஷம் என்றால் எப்படி இருக்கும் என்பதை முழுமையாக உணர முடிந்தது. என்னைவிட மகிழ்ச்சியாக எந்த மனிதனும் இருக்க முடியாது என்று கூறினால் மிகையாகாது.

அப்போது என் மனத்தில் ஒரு பயம் தோன்றியது உடனே நான் என் ஆசிரியரிடம் சென்று, “ஆசிரியரே, பிரதமருக்கு நம் பள்ளியை எப்படித் தெரியும்? அவர் ஏன் நமது பள்ளியையும் இங்குள்ள நாடகக்குழுவின் நாடகத்தையும் பார்க்கத் தேர்ந்தெடுத்தார்? என்று கேட்டேன். அதற்கு அவர் சமீபத்தில் நம் பள்ளியின் நாடகக்குழு சிங்கப்பூர் இளைஞர் விழாக்கான போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதால் அந்த வாய்ப்புக் கிடைத்தது. பொதுவாக நாடகத்தில் தங்கப்பதக்கம் வெல்வது என்றால், விண்ணையும் மண்ணையும் சேர்க்க நினைப்பதற்குச் சமம் என்பதை நன்றாக நானறிவேன் என்று கூறினார்.

மேலும், “இந்த அதிசயத்தைக் கண்டு நம் நாட்டுப் பிரதமர் வியந்துபோனார் என நம்புகிறேன்” என்று பதிலளித்தார் என் ஆசிரியர் அதைக்கேட்ட நான் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தேன். எனக்குக் கிடைத்த இந்தப் பொன்னான வாய்ப்பைக் கைவிடாமல், நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தேன். நாங்கள் முன்பு போட்டியில் படைத்த நாடகத்தைவிட, பிரதமருக்கு நாங்கள் படைக்கப்போகும் நாடகம் பன்மடங்கு அருமையானதாக அமைய வேண்டும் என்று என் குழுவினரிடம் கூறினேன். அனைவரும் இரவும் பகலுமாக அயராமல் உழைத்து, பிரதமரின் மனத்தில் ஆணித்தரமாகப் பதியும்படி நடித்துக்காட்ட வேண்டும் என்றும் முடிவெடுத்தோம்.

நாங்கள் எங்கள் இலட்சியத்தை அடைய விடாமுயற்சியுடன் செயல்பட்டோம், எங்களுக்கு மூன்று மாதங்கள்தான் இருந்தன. இந்த மூன்று மாதங்களுக்குள் நாங்கள் எங்களைத் தயார் செய்து ஒரு புதிய சாகசத்தைப் படைக்க வேண்டும். இந்த மூன்று மாத பயணம் இனிமையானதாக அமையும் என்று நம்பினேன். ஆனால், நடக்கவில்லை. எங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் பல்வேறு காரணங்களினால் தினந்தோறும் நடக்கும் வகுப்புகளுக்குச் சரிவர வரமுடியவி;ல்லை. இதனால் எங்களால் ஒழுங்காக ஒரு முழுமையான குழுவாகப் பயிற்சி செய்ய முடியவில்லை.

ஆனால், எங்கள் நாடக ஆசிரியர் எங்களுக்குத் தூணாக நின்றார். ஆசிரியரின் உதவியால், எங்களால் ஒரு குழுவாகப் பயிற்சி செய்ய முடிந்தது. அதனால் உடைந்து போன என் இலட்சியம் மற்றும் ஆசைகள் மீண்டும் துளிர்விட்டு முளைத்தன. நான் அதற்குப்பின் எளிதில் பின்வாங்கக் கூடாது என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன். மூன்று மாதங்களும் விரைந்து உருண்டோடின.

நாடகம் படைப்பதற்கான நாளும் வந்தது. அந்த நாள் என் நாடகக்குழுவிற்கு ஒரு முக்கியமான நாள், ஆம் பிரதமர் முன் நடிக்கப்போகும் நாள் இந்த நாள்தான். மிகுந்த புத்துணர்ச்சி மற்றும் உற்சாகத்துடன் நாடக அரங்கத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். போய்க் கொண்டிருந்தபோதும் அதன்பின் நடந்த சம்பவமும்தான் என் மனத்தைத் தூள் தூளாக உடைந்துபோகச் செய்தன. அன்று என் அம்மா என்னை வண்டியில் அழைத்துக்கொண்டு பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தார். திடீரென்று எங்கள்

வண்டியை ஒரு பெரிய லாரி வந்து மோதியது. சில விநாடிகளுக்கு, உலகமே அழிந்துவிட்டது எனத் தோன்றியது. நானும் என் அன்னையும் பலத்த காயத்திற்கு உள்ளானோம். என் அம்மா மயக்க நிலையில் இருந்தார். நான் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தேன். அந்த நேரத்தில் என் மனத்தினுள் மகாபாரதப் போர் போல் ஒரு பெரும் மனப்போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

'நான் நாடகத்தில் நடித்து முடித்து பின்னர் வந்து என் அம்மாவைப் பார்த்துக்கொள்ளலாமா? அல்லது நாடகத்தில் நடிக்காமல் அம்மாவைப் பார்த்துக் கொள்வதா? இந்த இரண்டு கேள்விகளும் என் மனத்தினுள் வாட்டின. பெருந்தன்மை கொண்ட என் அன்பு அம்மா என்னை நாடகத்திற்குச் செல்லுமாறு கூறினார். ஆனால், என்னால் போக முடியவில்லை. எனக்கு அது சரி என்று தோன்றவில்லை. என் சுயநலத்திற்காக என் அம்மாவைப் பார்த்துக்கொள்ளாமல் இருப்பது அநியாயம் என்று தோன்றியது.

ஆகையால் வேறு வழியின்றி நாடகத்திற்குச் செல்ல வேண்டாம் என்று முடிவெடுத்தேன். உடனே, என் ஆசிரியரை அழைத்து என் முடிவைத் தெரிவித்தேன். என் ஆசிரியர் முற்றிலும் அதிர்ந்து போனார் என்னைப் பலவாறு கெஞ்சி நாடகத்திற்கு வருமாறு கூறினார். ஆனால், நான் வேறு வழியின்றி அதை மறுத்துவிட்டேன். ஆசிரியரும் வேறு வழியின்றி என் கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு என் தோழியைத் தேர்ந்தெடுத்தார். நான் என் சொந்த உழைப்பால் எழுதிய என் கதாப்பாத்திரத்திற்கான உரையாடலைப் பேசி என் தோழி நடிக்கப்போகிறாள் என்பதைத் தெரிந்தவுடன் உடைந்துப் போனேன். வாழ்க்கையைத் தொலைத்துவிட்டதாக எண்ணம் என்னுள் ஏற்பட்டது.

அது மட்டுமில்லாமல், நாடகம் முடிந்தவுடன் அனைவரும் என் தோழியை மட்டுமே பாராட்டினார். இது நியாயமா? என் அயரா உழைப்பிற்குக் கிடைத்த வெற்றிக்கு என் தோழி ஏன் பாராட்டப்பட்டாள்? என்னால் அதை இந்நாள் வரை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நான் மிகவும் வருந்தினேன்.

பிறகு என் ஆசிரியர் என்னிடம் பேசினார். அவருடன் பேசியபின் மனம் தெளிந்து பழையபடி மாறினேன். சோகமாக இருந்தாலும் அதைக்கடந்து மகிழ்ச்சியோடு வாழ என் பெற்றோர், ஆசிரியர் மற்றும் நண்பர்கள் கற்றுக்கொடுத்தனர்.

**வைஷ்ணவி செல்வகாசி**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

## வாழ்க்கை நாடகம்

ஒரு மொழியில் எழுத்து மற்றும் பேச்சோடு நாடகம் என்பதும் முக்கியமான ஒரு பகுதியாகும். எடுத்துக்காட்டாக, நம் தாய்மொழி மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. அவை இயல், இசை, நாடகம் என்பவையாகும். இதில் நாடகம் இயலும் இசையும் சேர்ந்த கலவையாகும். நடிப்பது ஒன்றும் சுலபமில்லை. ஒரு நடிகன் உருவாக்கப்படுவதில்லை, அவன் பிறக்கிறான். எனக்கும் நடிக்கப் பிடிக்கும். ஆங்கில நாடகம்தான் என் பள்ளியில் உள்ள எனது இணைப்பாட நடவடிக்கை ஆகும். அதிர்ஷ்டம் வாழ்க்கையில் ஒரு சில முறைதான் கதவைத் தட்டும். அவ்வாறு வந்த அதிர்ஷ்டவசமான வாய்ப்பு ஒன்றை நான் எதிர்பாராத சூழ்நிலைக் காரணத்தால் தவறவிட்டேன். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி என்னுடைய நண்பன் பாராட்டும் புகழும் பெற்றுவிட்டான். அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

நானும் என் நண்பன் ராமுவும் நாடகத்தில் நடிப்பவர்கள். இருவரும் நல்ல நடிகர்கள்தான். எங்கள் பள்ளி மாணவர்களோடு நாங்கள் போன வருடம் சிங்கப்பூர் இளையர் விழாவுக்கான போட்டியில் பங்கேற்றோம். அதில் எங்களுக்குத் தங்கம் கிடைத்தது. எங்களுடைய நாடகம் நம் நாடான சிங்கப்பூரைப் பற்றியதாகும்.

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேராது இயல்வது நாடு”

என்னும் குறளுக்கேற்ப நம் நாடு சிறந்த நாடாகத் திகழ்கிறது. அதனைப் பற்றி எங்கள் நாடகம் அமைந்திருந்ததாலும் மிகச் சிறப்பாக நடிகர்கள் நடித்ததாலும் நம் நாட்டுப் பிரதமர் எங்கள் நாடகத்தைக் காண விரும்பினார். அவ்வாறுதான், அவர் முன் நடிப்பதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. இதனால் எங்கள் பள்ளியில் உள்ள அனைவரும் உச்சி குளிர்ந்துள்ளனர்.

மறுபடியும் அதே நாடகத்தைத்தான் நடிக்க இருந்தோம். இருப்பினும் நாங்கள் அதற்காக அல்லும் பகலும் உழைத்தோம். நாள்தோறும் ஏழு மணிவரை நாங்கள் பயிற்சி செய்தோம்.

நாள் நெருங்க நெருங்க எனக்குப் பயம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. நம் நாட்டின் பிரதமர் முன்னாள் நடிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. பயிற்சி முடிந்து வீட்டிற்குத் திரும்பும் வழியில் நான் சாலையைக் கடந்து கொண்டிருந்தபோது ஒரு வாகனம் மிக வேகமாக வந்து என்னை மோதிவிட்டுச் சென்றது. இதில் என்னுடைய தவறு ஒன்றுமில்லை. நான் போக்குவரத்து விதிப்படிதான் சாலையைக் கடந்தேன். அந்த வாகன ஓட்டுநர்தான் மிக வேகமாக ஓட்டிவந்து விபத்தை உண்டாக்கினார்.

அந்த விபத்திற்குப் பின்னர், நான் மருத்துவமனையில் கண் வழித்தேன். என்னுடைய வலது காலிலும் இடது கையிலும் எலும்புகள் முறிந்து இருந்தன. என்னால் நடக்கக்கூட முடியவில்லை. நான் நடிக்கும் கதாப்பாத்திரமோ ஓடி ஆடி மகிழச்சியாக இருக்கும் ஒரு பாத்திரம். எனவே, என்னால் நடிக்க முடியவில்லை அத்தோடு மருத்துவர்கள் எனக்கு இரண்டு வாரம் மருத்துவ விடுப்பும் அளித்திருந்தனர். எனவே, நான் பிரதமர் முன்பு நடிக்கவில்லை இந்தச் சமயம் பார்த்து என்னுடைய நண்பன் ராம் என்னுடைய கதாப்பாத்திரத்தை ஏற்று நடிக்க முன்வந்தான். என்னுடைய கதாபாத்திரத்திரம்தான் அந்த நாடகத்தின் மிக முக்கியமான ஒன்று. ஆகவே, அதுவே நாடகத்தின் ஒளி என்று கூறலாம்.

ராமுவிற்கு என்னுடைய கதாபாத்திரத்தில் நடிக்க ஆசை இரருந்தது. ஆனால், ஆசிரியரோ எனக்கு அந்த வாய்ப்பினை அளித்தார். ஏனெனில் நான் ராமைவிடச் சிறப்பாக நடிப்பேன். ஆனால், இப்போது என்னால் நடிக்க இயலவில்லை என்பதால் அடுத்துச் சிறந்த நடிகனான ராம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டான்;.

இறுதியாக எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நாளும் வந்தது. பிரதமர் முன்பு என் பள்ளி மாணவர்கள் அனைவரும் மிகச்சிறப்பாக நடித்தனர். அதிலும் ராம் மிகச்சிறப்பாகச் செய்தான் பிரதமர் ராமுவைத் தனியாக அழைத்து அவருடைய பாராட்டுகளைத் தெரிவித்தார். அதோடு அந்த நாடகம் தொலைக்காட்சியிலும்; ஒளி பரப்பப்பட்டது. சிங்கப்பூரே அதைக் கண்டது. இணையத்திலும் முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களிலும் அது பகிரப்பட்டது அனைவரும் ராமின் மிகச் சிறந்த நடிப்பைப் பாராட்டினார். புகழ் அவனைத் தேடி வந்தது. பாராட்டுகள் வந்து குவிந்தன.

ராம் புகழப்படுவதைக் கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அவன் என்னுடைய நெருங்கிய நண்பன் ஆவான். எனவே எனக்குச் சற்றுப் பெருமையாகவும் இருந்தது. அதே சமயத்தில் எனக்கு மிகவும் பொறாமையாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது. நான் மட்டும் விபத்தில் சிக்கிக்கொள்ளாமல் இருந்திருந்தால் இன்றைக்கு நான்தான் இந்தப் புகழையும் பராட்டையும் பெற்றிருப்பேன். ராம். அந்த வாய்ப்பினைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு எல்லாவற்றையும் தன்வசப்படுத்திக்கொண்டான். அதனால், எனக்கு அவன்மேல் சற்றுக் கோபமாக இருந்தது. இருந்தாலும், அவனுடைய தவறு இதில் ஒன்றும் இல்லையே அவன் கிடைத்த வாய்ப்பை நன்கு உபயோகித்துக்கொண்டான். நானோ அதனைத் தவறவிட்டேன்.

இந்தச் சம்பவம்மூலம், நான் என்னுடைய பாடத்தைக் கற்றுக்கொண்டேன். வாய்ப்புகள் என்பது வாழ்க்கையில் நமக்குப் பல முறைகள் வரலாம். அல்லது வராமலும் போகலாம். நமக்குக் கிடைத்த வாய்ப்பை நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நம்மால் முடிந்தவரை அந்த வாய்ப்பிலிருந்து நன்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நான் சாலையைக் கடக்கும்போது இன்னும் கவனமாக இருந்திருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால், நான் அந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம். நாடகத்தில் நடித்திருக்காலம் கிடைக்க வேண்டிய புகழையும் பாராட்டையும் பெற்றிருக்கலாம். அனுபவமே சில பாடங்களைக் கற்றுக்கொடுக்கும். நான் அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடம் இதுவே.

**வர்ஷினி சரவணன்**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

## இணையப் பயன்பாடு

இணையம் என்பது ஒருவரின் வயதைப் பொருட்படுத்தாமல், அனைவருக்குமே நன்மையளிக்கும் ஒன்று, ஆனால் ஒரு கத்திக்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல, இணையத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. இணையத்தினால் பல நன்மைகளும் ஏற்படுகின்றன பல தீமைகளும் ஏற்படுகின்றன. அவற்றுள் ஒன்று, இணையம் வழி மிரட்டுவது ஆகும். இணையம் வழி மிரட்டுவது என்ன என்பதையும் அது மற்றவர்களுக்கு எந்த வகையில் தீங்கு விளைவிக்கிறது என்பதையும் அவ்வாறு மிரட்டுபவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க வேண்டும் என்பதற்கான என்னுடைய கருத்துகளையும் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

இணையம் வழி பிறரை மிரட்டுவது, ஒரு கையடக்கத் தொலைபேசி அல்லது ஒரு கணிணியின் திரைக்குப் பின்னால் மறைந்திருந்து மற்றவர்களின் மனத்தைக் காயப்படுத்துதல் ஆகும். இந்தக் கொடூரமான செயலுக்கு வழிவகுப்பது இணையத்தில் இயங்கும் சமூக ஊடகங்களே ஆகும். சமூக ஊடகங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தி ஒருவரை மிரட்டுதல் ஒருவரின் மதத்தையோ தோற்றத்தையோ அவர்கள் செய்யும் நடவடிக்கைகளையோ கேலி செய்து அவர்களின் மனத்தைச் சுலபமாகக் கஷ்டப்படுத்தமுடியும் சமூக ஊடகங்களான, புலனம் என்றழைக்கப்படும் ‘வாட்ஸாப்’, இன்ஸ்டாகிராம்’, கீச்சகம் என்றழைக்கப்படும் ‘டுவிட்டர்’, முகநூல் போன்றவற்றைப் பயன்படுத்திப் புண்படுத்துவதை நாம் பெரும்பாலும் பள்ளிகளில் பார்க்கலாம்.

இவ்வாறு இது போன்ற சமூக ஊடகத் தளங்களில் ஒருவரின் உள்ளத்தைச் சிதறவைக்கும் வார்த்தைகளான கோழை, முட்டாள், கருப்பு நிறம், அறிவு கெட்டவன் போன்ற வார்த்தைகளை ஒருவர்மீது ஒருவர் திரைக்குப் பின்னால் மறைந்திருந்து பயன்படுத்தினால் அதை அனுப்பியவன்தான் உண்மையான கோழை. “அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு” என்ற பழமொழிக்கேற்ப நாம் எப்போதும் சமூக ஊடகங்களில் எதையும் அளவோடு பயன்படுத்த வேண்டும். அதாவது, சமூக ஊடகங்களை அதிகமாகப் பயன்படுத்திப் பிறரின் மனத்தைப் புண்படுத்தாமல், அளவோடு பயன்படுத்த வேண்டும்.

இணையம்வழி மற்றவர்களின் மீது நான் முன்பு கூறியுள்ள வார்த்தைகளைப் பயன்படுத்தும்போது அதை நாம் அவர்களைக் கேலி செய்வதற்காக மட்டும் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால, அதை நாம் நினைத்தபடியே அவர்கள் அதை சாதாரணமாக எடுத்துக்கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. சிலர் அதற்கு மாறாக நாம் கூறியதைத் துயரமாக எடுத்துக்கொள்வார்கள். இதனாலேயே சிலர் துயரப்பட்டுத் தன்மீது குறைந்த தன்னம்பிக்கை கொள்கிறார்கள். இன்னும் சிலர் தற்கொலை செய்யவும் துணிகிறார்கள். இவ்வாறு இணையம் வழி மிரட்டுபவர்களுக்கு நிச்சயம் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். ஒருவரின் இழப்பிற்கும் காரணமாகிவிடும் இவர்களுக்கு அதிகமான கூடுதல் அபராதம் அல்லது ஏழு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும். இணையம் வழி பிறரை மிரட்டுதல் ஒரு கொலைக்குச் சமம். ஒருவரைக் கையால் கொலை செய்வது மட்டும் ஒரு கொலையல்ல, வார்த்தைகளாலேயும் கொலை செய்யலாம்.

‘அரிது! அரிது! மானிடராய்ப் பிறத்தல் அரிது! அதனினும் அரிது, கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல்’, என்பது ஔவைப்பாட்டியின் முத்தான சொற்கள். இப்பழமொழிக்கேற்ப

இப்புவியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் அரிது. அதனால் எல்லோரையும் மதித்து, போற்றி வாழ்வோம். யாரையும் புண்படுத்தாமல் வாழ்வோம்!

**அம்பிகை**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 2**

## வாழ்க்கையை மாற்றிய சம்பவம்

வணக்கம், என் பெயர் திவ்யா, நான் இப்பொழுது உயர்நிலை இரண்டில் படிக்கிறேன். உயர்நிலை ஒன்றில் நடந்த ஒரு சம்பவத்திற்கு முன், நான் ஒரு குறும்புத்தனமான மாணவியாக இருந்தேன். எந்நேரமும் விளையாட்டுத்தனமாகவே இருப்பேன். ஆனால், இப்போது அது மாறிவிட்டது. அச்சம்பவம், என் குறும்புத்தனத்தை நீக்கியது. இது நல்லதுதான். ஆனால், சம்பவமோ, கசப்பாகவும் மனவேதனை தரும் அளவிற்குக் கஷ்டமாகவும் அன்றோ இருந்தது. அதைப் பற்றிப் பார்ப்போம்.

"ஏ, கலா! இங்கே வா. கீதாவும் மாலாவும் எங்கே?" என என் உயிர்த் தோழியிடம் வினவினேன். கலா, கீதா மற்றும் மாலா மூவருமே எனது உயிர்த் தோழிகள். குறும்புத்தனத்தினால், என்னால் பாடத்தில் கவனம் செலுத்தமுடியவில்லை. வகுப்பிலே முதல் மூன்று இடத்தைப் பிடிக்கும் மாணவர்களாக விளங்கியவர்கள்தான் இந்தக் கலா, கீதா மற்றும் மாலா. "பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்" என்பதைப்போல அவர்களோடு நட்பு வைத்துக்கொண்டவுடன் எனது மதிப்பெண்களும் உயரத் தொடங்கின. அவர்களும், எனது நகைச்சுவை பேச்சுப் பிடித்துப்போய் நண்பராக என்னையும் சேர்த்துக் கொண்டனர். அப்படிப்பட்டவர்களிடமா நான் இப்படி ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும்? "தெரியவில்லை, திவ்யா. நீ அறிவியல் தேர்வுக்குத் தயார் தானே?" என்று பதில் கேள்வி கலா எழுப்பினாள்.

"ம்ம்.. தயார், தயார். ஆனால் தேர்வுக்கு முன் கடைசியாக ஒரு முறை நாம் சேர்ந்து படித்தால் நன்றாக இருக்கும். அதோ! அவர்களே வந்துவிட்டார்கள்." எனச் சூரியனைக் கண்ட தாமரை போல் முகம் மலர்ந்து கூறினேன். அறிவியல் தேர்வுக்கு நன்றாகப் படித்திருந்தாலும், சில கேள்விகள் இன்னும் மனத்தில் நிலவின. என் மனத்தின் சந்தேகங்களைத் தீர்த்தவுடன் தேர்வைத் தொடங்கினால் பயப்படத் தேவையில்லை என எண்ணினேன். கீதாவும் மாலாவும் பக்கத்தில் அமர்ந்தனர். நாங்கள் ஒன்றாக அறிவியல் சம்பந்தமாகக் கலந்துரையாட ஆரம்பித்தோம்.

அப்பொழுதுதான், எனது குரங்குப் புத்தி ஆட்டம் ஆடத் தொடங்கியது. நான் என்னுடைய நண்பர்களிடமே எனது வேலையைக் காட்டினேன். யாரும் பார்க்காத நேரத்தில், நான் என் மூன்று தோழிகளின் மேசைக்கு அடியில் அறிவியல் குறிப்புகளைக்கொண்ட தாள்களை வைத்தேன். தேர்வுக்கு முன் அவர்கள் சுதாரித்துக் கொள்வார்கள் என எண்ணினேன். எவ்வளவு பெரிய முட்டாள் நான்?

அதன்பிறகு, மீண்டும் ஒன்றும் தெரியாத அப்பாவி முகத்துடன், கலந்துரையாடலில் ஈடுபட்டேன். தேர்வு தொடங்கப் போகிறது என ஆசிரியர் அறிவித்துக்கொண்டே, வகுப்பறைக்குள் நுழைந்தார். எல்லாரும் பேசுவதற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்தனர். கலா, கீதா மற்றும் மாலா மேசைக்கு அடியில் இருக்கும் தாளைக் கண்டறிவார்கள் என நான் வைத்திருந்த நம்பிக்கை சுக்குநூறாக உடைந்தது. அவர்களிடம் தாளைப் பற்றிக் கூறும் முன் தேர்வு தொடங்கிவிட்டது. விளையாட்டும் வினையானது. ஆசிரியர் தாளைக் கண்டறியக்கூடாது என்று என்னால் கடவுளிடம் பிரார்த்திக்க மட்டும்தான் முடிந்தது. ஆனால், இறைவனே எனது பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்க்கவில்லை.

"மூவரும் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள்? எழுந்திருங்கள்!" என ஆசிரியர் எனது தோழிகளைப் பார்த்துக் கத்தினார். எனக்குக் குப்பென்று வியர்த்தது. எனது தோழிகளுக்கோ என்ன நடக்கிறது என்று புரியவில்லை. ஆசிரியர் அவர்களது

மேசையின் கீழிருந்து அறிவியல் குறிப்புகளை எடுத்தபோது, அவர்கள் அதிர்ச்சியில்; கற்சிலை போல் நின்றனர்.

“இல்லை! இல்லை! இதை நாங்கள் செய்யவில்லை!” எனக் கெஞ்சினார்கள். ஆனால், ஆசிரியரோ அவர்கள் சொல்வதைப் பொருட்படுத்தாமல் தலைமையாசிரியர் அறைக்கு அழைத்துச் சென்றார். பிறகு, என்ன நடந்தது என்று தேர்வின்போது தெரியவில்லை. ஆனால், பீதியால் என்னால் தேர்வை ஒழுங்காக எழுதமுடியவில்லை. ஒன்று மட்டும் எது நடந்திருக்கும் என எண்ணும்போது ஏற்படும்வேதனை எனது மூளையில் பதிவாகிவிட்டது. “என்னால் தான் எனது உயிர்த் தோழிகள் பிரச்சினையில் மாட்டிக்கொண்டனர்”. இது என் தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டும் என என் புத்திக்குத் தெரிந்தாலும், மனம் தண்டனையை எண்ணி அஞ்சியது. கடைசிவரை நான் ஒப்புக்கொள்ளவேயில்லை.

தலைமையாசிரியர் அலுவலகத்தில், மூவரும் தங்களின் அப்பாவித்தனத்தை எத்தனையோ முறை எடுத்துரைத்தனர். ஆனால், “செவிடன் காதில் ஊதிய சங்கு போல” தலைமையாசிரியர் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. அவர் மூவரின் பெற்றோர்களையும் வரவழைத்து, நிலைமையை எடுத்துக் கூறினார். மேலும், அறிவியல் தேர்வுக்குப் பூஜ்ஜியம் வழங்குவதோடு மற்றத் தேர்வுகளிலும் கலா, கீதா மற்றும் மாலா மூவரும் எழுத முடியாமல் நேரிட்டது.

இதற்கெல்லாம் காரணம் நான்தான் என்று எண்ணி வேதனைப்படாத நாளே இல்லை. “கெடுவான் கேடு நினைப்பான்”. இந்தப் பழமொழியின் அர்த்தத்தை அன்றுதான் நான் உணர்ந்தேன்.

எனது நண்பர்களே எனது விளையாட்டுத் தனத்திற்குப் பலியானது எனக்கு மனவுளைச்சலை அளித்தது.

“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று”

என்று வள்ளுவர் கூறிய வார்த்தைகளை நான் நினைவுகூர்ந்தேன். எனக்குப் படிப்பில் உதவிய நண்பர்களுக்கு நானே இப்படித் தீங்கு விளைவித்துவிட்டனே! என்று வருந்தினேன். அன்றே நான் ஒரு உறுதிமொழி எடுத்தேன். நான் குறும்புத்தனத்தைக் கைவிட்டுப் பொறுப்பாக மாற உறுதிமொழி எடுத்தேன். இது கடினம் என்று எனக்கே தெரிந்தது. ஆனால், என் குறும்புத்தனத்தால் என் நண்பர்களுக்கே தீங்கு விளைவித்ததால், நான் கைவிட்டுத்தான் ஆக வேண்டும்.

அன்றோ, நான் உயர்நிலை ஒன்றில் படித்துக்கொண்டிருந்தேன். இப்போது, இரண்டு வருடங்களாகிவிட்டன. இந்த இரண்டு வருடங்களில் நான் பொறுப்பாக மாறியதால், பாடத்தில் கவனம் செலுத்த முடிந்தது. மேலும், ஆசிரியர் என்னைப் பற்றிப் பெருமையாக எல்லாரிடமும் பேசினார். ஆனால், நான் கலா, கீதா, மாலா, மூவரிடமும் பேசுவதை நிறுத்திக் கொண்டேன். “குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்” என்பது போல, குற்றவுணர்ச்சியோடு என்னால் அவர்களிடம் பேச முடியவில்லை. நிச்சயமாக, இந்தச் சம்பவம் என் மனப்போக்கை மாற்றி வாழ்க்கையில் ஒரு நல்ல தாக்கத்தையும் மாற்றத்தையும், ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இந்தச் சம்பவம் என் மனப்போக்கையும், வாழ்க்கைமுறையையும் மாற்றிவிடும் என்று நான் சற்றும் நினைத்துப் பார்க்கவில்லை.

இச்சம்பவம் என் மனத்தில் பசு மரத்தாணி போல் பதிந்ததோடு எனது மனத்தில் ஒரு ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது.

**திவ்யா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 2**